செ.வெ.எண்: 41 / ஆகஸ்ட் /2019 நாள்: 19.08.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த 8 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 இலட்சம் வழங்குவதற்கான ஆணையினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி அவர்கள் ஆகியோர் நேரில் ஆறுதல் கூறி வழங்கினார்கள்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், பேரூர், கட்டப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 17 நபர்கள் டாட்டா ஏசி வாகனத்தில் எஸ்.என்.புதுார் கோயிலுக்கு செல்லும்பொழுது டிரைவர் கட்டுப்பாடு இல்லாமல் வேகமாக வாகனத்தை இயக்கி உள்ளார். இதனால் சாலையின் அருகே உள்ள கிணற்றில் வாகனம் விழுந்ததில் 8 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் காயமடைந்த 9 நபர்களில் ஒருவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். காயமடைந்த 8 நபர்கள் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தகவல் கிடைத்த உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் நேற்று (18.08.2019)உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு சென்று நேரில் பார்வையிட்டு கிணற்றில் விழுந்துள்ள நபர்களை காவல்துறை, மற்றும் தீயணைப்புத்துறையினரின் உதவியுடன் காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் உடல்களை கயிற்றினால் கட்டி மேலே கொண்டுவரப்பட்டு காயமடைந்தவர்களை சிகிச்சைக்காகவும், இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனைக்காக துறையூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

மேலும் துறையூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் அரசு மருத்துவமனை மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இதனைத்தொடர்ந்து இன்று (19.08.2019) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி அவர்கள் ஆகியோர் இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு.குணசீலன் (வயது 63), த-பெ.குழந்தை வேலு, பேரூர், திரு.குமாரத்தி (வயது 46) க-பெ.ஞானசீலன், பேரூர், திருமதி கோமதி (வயது 40) க-பெ.தனபால், பேரூர், திருமதி கயல்விழி (வயது 42),க-பெ.தமுருகேசன், கட்டப்பள்ளி, சிறுநாவலூர் மஜரா, செல்வி யமுனா (வயது 8), த-பெ.இளங்கோவன், பேரூர், செல்வன் சரண் (வயது 12), த-பெ.இளங்கோவன், பேரூர், செல்வி சஞ்சனா (வயது 4) த-பெ.முருகேசன், கட்டப்பள்ளி, சிறுநாவலூர் மஜரா, திருமதி எழிலரசி (வயது 40) க-பெ.குணசீலன், பேரூர் ஆகிய 8 நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி தலா ரூ.2 இலட்சம் வழங்குவதற்கான செயல்முறை ஆணையினை நேரடியாக வழங்கினார்கள்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000மும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு ரூ.25,000மும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது நிதியிலிருந்து வழங்கப்படும் எனத் தெரிவித்தார்கள்.

ஆறுதல் கூறும் நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.செல்வராஜ் (முசிறி), திருமதி எம்.பரமேஸ்வரி முருகன் (மண்ணச்சநல்லூர்), முசிறி வருவாய் கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

செய்தி வெளியீடு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.